## December 23, 2025 – தினமணி செய்தித்தாள் - சிறு துணுக்கள்

1. உலகின் மிகப் பெரிய தீவான கிரீன்லாந்துக்கு சிறப்புத் தூதரை நியமிப்பதாக அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்ப் அறிவித்துள்ளதற்கு டென்மார்க் கண்டனம் தெரிவித்துள்ளது.

    i. அந்த நாட்டின் தன்னாட்சிப் பிரதேசமாக செயல்பட்டுவரும் கனிமவளம் செறிந்த டென்மார்க்கை அமெரிக்காவுக்குச் சொந்த மாக்கவேண்டியது அவசியம் என்று டிரம்ப் தொடர்ந்து வலியுறுத்திவருகிறார். அந்த நோக்கத்தை முன்னெடுத்துச் செல்வதற்காக, லூசியானா மாகாண ஆளுநர் ஜெஃப் லாண்ட்ரியை கிரீன்லாந்துக்கான சிறப்பு தூதராக நியமிப்பதாக டிரம்ப் அறிவித்தார்.

    ii. இதற்கு கடும் கண்டனம் தெரிவித்து டென்மார்க் பிரதமர் மேட்டே ஃப்ரெடெரிக்செனும் கிரீன்லாந்து ஆளுநர் ஜென்ஸ்-ஃப் ரெட்ரிக் நீல்சனும் வெளியிட்டுள்ள கூட்டறிக்கையில், 'தேசிய பாதுகாப்பைக் காரணம் காட்டிக் கூட இன்னொரு நாட்டைக் கைப்பற்றுவது பற்றி விவாதிப்பது பெரும் தவறு' என்று சாடியுள்ளனர்.

2. பாகிஸ்தான் முப்படைகளின் தலைவர் சையது அசீம் முனீருக்கு சவூதி அரேபியாவின் மிக உயரிய சிவிலியன் விருதான 'கிங் அப்துல் அஜீஸ் மெடல் ஆஃப் எக்ஸலன்ஸ்' விருது வழங்கப்பட்டுள்ளது.

    i. அசீம் முனீரின் திறமைகளைப் பாராட்டிய சவூதி அரச தலைமை, இரு நாடுகளுக்கு இடையிலான நீண்டகால சகோதரத்துவ உறவை வலுப்படுத்துவதில் முனீரின் பங்களிப்பைப் பாராட்டியது என்று அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

3. ராஜஸ்தானில் உள்ள அஜ்மீர் ஷரீஃப் தர்காவுக்குப் பிரதமர் மோடி சார்பில் சம்பிரதாய போர்வையை (814-ஆம் ஆண்டு உர்ஸ் விழாவையொட்டி) மத்திய சிறுபான்மையினர் விவகாரங்கள் துறை அமைச்சர் கிரண் ரிஜிஜு வழங்கினார்.

    i. கடந்த 1141 முதல் 1236-ஆம் ஆண்டுவரை வாழ்ந்த சூஃபி துறவி கவாஜா மொய்னுதீன் சிஸ்டி அடக்கம் செய்யப்பட்ட அஜ்மீர் ஷரீஃப் தர்காவுக்குப் பிரதமர் மோடி சம்பிரதாயமாக போர்வை அளிப்பது வாடிக்கை. சிஷ்டி மறைவை அனுசரிக்கும் வகையில், ஆண்டுதோறும் நடைபெறும் உர்ஸ் விழாவையொட்டி, இந்தப் போர்வை அளிக்கப்படுகிறது.

4. அமெரிக்காவில் பணிபுரிவதற்கான 'எச்1-பி' விசா மற்றும் அந்தப் பணியாளர்களின் குடும்பத்தினருக்கான 'எச்-4' விசா விண்ணப்பங்களுக்கு சமூக ஊடக ஆய்வு கடந்த டிச. 15-ஆம் தேதி முதல் கட்டாயமாக்கப்பட்டுள்ளதாக இந்தியாவில் உள்ள அமெரிக்கத் தூதரகம் தெரிவித்துள்ளது.

    i. அமெரிக்காவில் ‘எச்1-பி’ விசா வழங்கும் திட்டத்தில் நடைபெறும் முறைகேடுகளைக் கண்டறிய டிரம்ப் நிர்வாகம் கண்காணிப்பைத் தீவிரப்படுத்தப்பட்டுள்ளது. இந்நிலையில், 'எஃப்', 'எம்', 'ஜே' போன்ற மாணவர் விசாக்களின் விண்ணப்பங்களுக்கு ஏற்கெனவே நடைமுறையில்

உள்ள இந்தச் சமூக ஊடக ஆய்வு, தற்போது 'எச்1-பி' மற்றும் ‘எச்-4' விசா போன்ற வேலைக்கான விசாக்களுக்கும் விரிவாக்கப்பட்டுள்ளது.

ii. இந்தப் புதிய நடைமுறையால், இந்தியாவில் டிச. 15-ஆம் தேதிக்குப் பிறகு நடைபெறவிருந்த ஆயிரக்கணக்கான 'எச்1-பி' விசா விண்ணப்பதாரர்களின் நேர்காணல்கள் திடீரென ரத்து செய்யப்பட்டன. இவை பல மாதங்களுக்குப் பிறகு ஒத்திவைக்கப்பட்டுள்ளதால், தற்போது விடுமுறையில் தாயகம் வந்துள்ள பணியாளர்கள் மீண்டும் அமெரிக்காவுக்குத் திரும்புவதில் சிக்கல் நீடிக்கிறது.

iii. எச்1-பி விசா திட்டத்தில் நடக்கும் முறைகேடுகளைத் தடுப்பதே இதன் முக்கிய நோக்கமாகும். அதேநேரம், தகுதியுள்ள சிறந்த வெளிநாட்டுப் பணியாளர்களை அமெரிக்க நிறுவனங்கள் பணியமர்த்துவதை இது உறுதி செய்யும். கூடுதல் சரிபார்ப்புப் பணிகள் காரணமாக விசா பெறுவதில் காலதாமதம் ஏற்படும் என்பதால், விண்ணப்பதாரர்கள் முன்கூட்டியே விண்ணப்பிக்க வேண்டும் என்று அறிவு றுத்தப்பட்டுள்ளனர்.

5. இந்தியா-நியூஸிலாந்து இடையே தடையற்ற (வர்த்தக ஒப்பந்த (எஃப்டிஏ) பேச்சுவார்த்தை வெற்றிகரமாக நிறைவடைந்ததாக இரு நாட்டு பிரதமர்களும் அறிவித்தனர். அடுத்த மூன்று மாதங்களில் இந்த ஒப்பந்தத்தில் இரு நாடுகளும் கையொப்பமிட்ட பின்னர் அமலுக்கு வரும் என எதிர்பார்க் கப்படுகிறது.

i. பிரதமர் நரேந்திர மோடி மற்றும் நியூஸிலாந்து பிரதமர் கிறிஸ்ஃடோபர் லக்ஸான் ஆகிய இருவரும் தொலைபேசியில் கலந் துரையாடிய பின் இந்த அறிவிப்பு வெளியானது.

ii. இந்திய பொருள்கள் மீது 50 சதவீத இறக்குமதி வரியை அமெரிக்கா விதித்துள்ள நிலையில், பல்வேறு நாடுகளுடன் இந்தியா தடையற்ற வர்த்தக ஒப்பந்தத்தை மேற்கொண்டு வருகிறது.

iii. இருமடங்கு வர்த்தகம்: வரலாற்றுச் சிறப்புமிக்க இந்த ஒப்பந்தம் இறுதியானதன் மூலம் பொருளாதாரம், சந்தை அணுகல், முதலீடு, வேளாண்மை, வணிகம், குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில்கள் என இரு நாடுகளிலும் பல்வேறு துறைகளில் ஒத்துழைப்பு மேம்படவுள்ளது. இரு நாடுகளைச் சேர்ந்த மாணவர்கள் மற்றும் இளைஞர்கள் இந்த ஒப்பந்தத்தால் பெரிதும் பலனடைவர். அடுத்த 5 ஆண்டுகளில் இரு தரப்பு வர்த்தகத்தை இரட்டிப் பாக்கவும், 15 ஆண்டுகளில் நியூ ஸிலாந்தில் இருந்து இந்தியாவில் மேற்கொள்ளப்படும் முதலீட்டை ரூ.1.80 லட்சம் கோடியாக அதிகரிக்கவும் இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது' எனத் தெரிவிக்கப்பட்டது.

iv. எந்தெந்த துறைகளுக்குப் பலன்? இந்தியாவில் இருந்து மேற்கொள்ளப்படும் ஏற்றுமதிகளுக்கு 100 சதவீதம் வரிவிலக்கு அளிக்கப்படுகிறது. அதேபோல் நியூஸிலாந்தில் இருந்து இந்தியாவுக்கு ஏற்றுமதி செய்யப்படும் 95 சதவீத பொருள்களுக்கு வரிவிலக்கு அளிக்கப்படுகிறது. இந்த ஒப்பந்தத்தால் இந்தியாவில் ஜவுளி, தோல், காலணிகள், கடல்சார் உணவுகள், ஆபரணங்கள், கைத்தறிகள், வாகனப் போக்குவரத்து, பொறியியல் சார்ந்த சரக்குகள்,

மருந்துகள், உள்ளிட்ட துறைகள் பெருமளவில் பயனடையவுள்ளன. இதுதவிர ஆயுஷ், கலாசாரம், மீன்வளம், வனத்துறை,தோட்டக் கலை உள்ளிட்ட துறைகளிலும் நியூஸிலாந்துடன் ஒத்துழைப்பு மேம்படவுள்ளது. வேளாண் உற்பத்தியை ஊக்குவிக்கும் வகையில் ஆப்பிள், 'கிவி' பழம் மற்றும் தேனுக்கு சிறப்பு மையங்களை நியூஸிலாந்து அமைக்கவுள்ளது.

v. **தற்காலிக விசா:** இந்திய பணியாளர்களுக்கு தற்காலிக வேலை வாய்ப்பு விசா (நுழைவு இசைவு) வழங்கவும் இந்த ஒப்பந்தம் வழி வகுக்கிறது. அதன்படி திறன் வாய்ந்த 5,000 இந்தியப் பணியாளர்கள் எப்போது வேண்டுமானாலும் விசா பெற்று நியூஸிலாந்தில் 3 ஆண்டுகள் வரை பணியாற்றலாம். யோகா மற்றும் ஆயுஷ் பயிற்சியாளர்கள், இசை ஆசிரியர்கள், தகவல் தொழில்நுட்பம், பொறியியல், மருத்துவம், கல்வி, கட்டுமானம், சமையல்காரர்களுக்கும் இந்த விசா நீட்டிக்கப்படுகிறது.

vi. **பால்வளத் துறையில் சலு கையில்லை:** பால்வளத் துறை சார்ந்த பொருள்களை ஏற்றுமதி செய்யும் மிகப்பெரும் நாடுகளில் ஒன்றாக நியூஸிலாந்தும், பால்வளத் துறையை மையமாகக் கொண்டு எண்ணற்ற சிறு விவசாயிகளைக் கொண்ட நாடாக இந்தியாவும் திகழ்கிறது. இந்நிலையில், எஃப்டிஏவின் கீழ் பால்வளத் துறையில் நியூஸிலாந்துக்கு எவ்வித சலுகையும் வழங்கப்படவில்லை என அதிகாரி ஒருவர் தெரிவித்தார். பால் பிற நாடுகளுடனான வர்த்தக ஒப்பந்தங்களின் போதும் உற்பத்தி சார்ந்த பொருள்களை அதிக அளவில் இறக்குமதி செய்ய இந்தியா அனுமதி வழங்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

vii. **இருதரப்பு வர்த்தகம்:** 2025- ஆம் நிதியாண்டில் இந்தியா-நியூஸிலாந்து இடையே ரூ.11,700 கோடிக்கு வர்த்தகம் நடைபெற்றுள்ளது. இந்தியா ரூ.6,300 கோடிக்கு ஏற்றுமதியும் ரூ.5,283 கோடிக்கு இறக்குமதியும் செய்துள்ளது.

viii. இறக்குமதி வரியாக நியூஸிலாந்து 2.3 சதவீதமும், இந்தியா 17.8 சதவீதமும் விதித்துள்ளன. 58.3 சதவீத இந்திய பொருள்களுக்கு ஏற்கெனவே நியூஸிலாந்து வரிவிலக்கு அளித்துள்ளது.

ix. எரிபொருள், ஜவுளி மற்றும் மருந்துகள் ஆகிய பொருள்கள் இந்திய ஏற்றுமதியில் முக்கியப் பங்கு வகிக்கிறது.

6. பசிபோக்கும் உழவுத் தொழிலைப் பாதுகாப்பது தொடங்கி, திடீர் புயல்,வெள்ள அபாயங்களில் மக்களைக் காக்கும் பேரிடர் மேலாண்மை வரை, தமிழ்நாட்டின் ஒவ்வொரு அசைவையும் வழிநடத்தும் ஆற்றல் வானிலைத் தகவல்களுக்கே உண்டு. இந்தியாவின் வானிலையியல் ஆய்வுத் தளம், மத்திய அரசின் இந்திய வானிலை ஆய்வுத் துறை என்ற வலிமை வாய்ந்த அரசுக் கட்டமைப்பையும், சமீபத்திய எண்மப் புரட்சியில் எழுச்சி கண்டுள்ள தனியார் வானிலை ஆய்வாளர்கள் என்ற துணைக் கட்டமைப்பையும் அடிப்படையாகக் கொண்டுள்ளது.

i. ஆனாலும், தலைநகர் புதுதில்லியை மையமாகக் கொண்ட தேசிய அணுகு முறை, தமிழ்நாட்டின் தனித்துவமான புவியியல் மற்றும் காலநிலைச் சவால்களுக்குத் துல்லியமான தீர்வை வழங்குவதில் பல நேரங்களில்

சறுக்கலைச் சந்திக்கிறது. எனவே, தேசிய மையத்தின் பொதுவான பார்வையின் வரம்புகளைத் தாண்டி, தமிழ்நாட்டுக்கெனப் பிரத்யேகமான, அதிவிரைவான, எச்சரிக்கைக் கொடிபிடிக்கும் தனி வானிலை ஆய்வு மையம் தேவை என்ற கோரிக்கை இன்று வலுவான மக்கள் குரலாக ஓங்கி ஒலிக்கிறது.

ii. 1875-ஆம் ஆண்டு நிறுவப்பட்ட இந்திய வானிலை ஆய்வுத் துறை, அதன் அதிநவீன டாப்ளர் ரேடார்கள் மற்றும் சிக்கலான எண்ணியல் வானிலை முன்னறிவிப்பு மாதிரிகள் வாயிலாக உலகத் தரத்துக்கு இணையான கணிப்புகளை வழங்குகிறது. புயல், வெள்ளம் போன்ற இயற்கைச் சீற்றங்கள் குறித்த அதன் எச்சரிக்கைகள், நாட்டுக்குப் பெரும் உயிர்ச் சேதத்தைத் தவிர்ப்பதில் முதுகெலும்பாகச் செயல்பட்டு நாட்டின் பாதுகாப்புக்குப் பங்களிக்கின்றன.

iii. இந்திய வானிலை ஆய்வுத் துறையின் தலைமையகம் புது தில்லியில் அமைந்திருந்தாலும், மும்பை, சென்னை, கொல்கத்தா, நாகபுரி, மச்சிலிப்பட்டினம் மற்றும் குவாஹாட்டி ஆகிய ஏழு மண்டல ஆய்வு மையங்கள் வழியாகவே பணிகள் நடை பெறுகின்றன. இவற்றில், சென்னையில் செயல்படும் மண்டல ஆய்வு மையம் ஆந்திரம், கர்நாடகம், கேரளம், தமிழ்நாடு, லட்சத் தீவுகள், புதுச்சேரி ஆகிய பெரு வாரியான பகுதிகளின் வானிலைச் செயல்பாடுகளை ஒரே நேரத்தில் கவனிக்கிறது.

iv. தமிழ்நாட்டுக்கு தனி வானிலை ஆய்வு மையம் தேவைப்படுவதற்கு அதன் தனித்துவமான காலநிலைச் சுமையே முக்கியக் காரணமாகும். இந்தியாவின் பெரும்பாலான பகுதிகள் தென்மேற்குப் பருவமழையை நம்பியிருக்க, தமிழ்நாடு பிரதானமாக வட கிழக்குப் பருவமழையைச் (அக்டோபர்- டிசம்பர்) சார்ந்தே உள்ளது. வானிலை ஆய்வில் வட இந்தியாவுக்கு அதிக முக்கியத்துவம் கொடுக்கும் தேசிய அணுகுமுறையால், வடகிழக்குப் பருவமழைக் காலப்போக்குகளைத் துல்லியமாகக் கண்காணிப்பதில் கவனம் சிதறுகிறது.

v. சுமார் 1,076 கி.மீ. நீளமுள்ள கடற்கரையைக் கொண்ட தமிழ்நாடு, இந்தியாவின் இரண்டாவது பெரிய கடற்கரை மாநிலமாகும். வங்காள விரிகுடா, அரபிக் கடல் மற்றும் இந்தியப் பெருங்கடல் ஆகிய மூன்று பகுதிகளின் சந்திப்பில் தமிழ்நாடு அமைந்துள்ளது. இந்தக் கடல்களில் உருவாகும் புயல்கள் அதிவேகமாக நகர்ந்து, சில மணி நேரங்களிலேயே அபாயகரமாக மாறக்கூடும். புது தில்லியில் இருந்து எச்சரிக்கைகள் வந்து சேரும் காலதாமதம், பொதுமக்களுக்கும், மீனவர்களுக்கும், நிர்வாகத்திற்கும் உடனடி நடவடிக்கை எடுக்கத் தடையாக உள்ளது.

vi. தேசிய மையத்தின் பொதுவான எச்சரிக்கைகள், காவிரி டெல்டாவின் நீர்ப்பிடிப்புப் பகுதிகள் அல்லது சென்னையில் தாழ்வான பகுதிகள் போன்ற மிகச் சிறிய பகுதிகளின் வேறுபாடுகளைப் புறக்கணிப்பதால், வெள்ளம் மற்றும் நீர்வரத்துக்கணக்கீடுகளில் துல்லியம் கிடைப்பதில்லை.

vii. தமிழ்நாட்டின் அசுர வேகத் தொழில் மற்றும் பொருளாதார வளர்ச்சிக்கு, பிரத்யேக வானிலை தகவல்கள் மிகவும் சென்னை, இன்றியமையாதவை. தூத்துக்குடி போன்ற முக்கியத் துறைமுகங்களின் சரக்கு மேலாண்மை மற்றும் கப்பல் பாதுகாப்புக்கு, சிறிய கால இடைவெளியிலான துல்லியமான கடல்

வானிலை முன்னறிவிப்புகள் (அலை உயரம், நீரோட்ட வேகம்) அவசியத் தேவை.

viii. சென்னை, திருச்சி, மதுரை, கோவை போன்ற பெருநகரங்களின் விமான நிலையங்களிலிருந்து ஏராளமான விமானச் சேவைகள் இயக்கப்படுகின்றன. இவற்றின் பாதுகாப்பான இயக்கத்துக்கு, வானிலையின் உள்ளூர் சார்ந்த துல்லியக் கணிப்புகள் அத்தியாவசியமாக உள்ளன.

ix. மேட்டூர், பவானிசாகர் போன்ற முக்கிய அணைகளின் நீர்வரத்துக் கணக்கீடுகளுக்கு, நீர்ப்பிடிப்புப் பகுதிகளில் பெய்யும் மழையின் அளவு குறித்த மிகத் துல்லியமான உள்ளூர் முன்னறிவிப்பு தேவைப்படுகிறது.

x. தனியார் வானிலை ஆய்வாளர்கள் சமூக ஊடகங்கள் மூலம் எளிய வட்டார மொழியில் தகவல்களைப் பரிமாறி, மக்களுடன் நெருக்கமான மற்றும் துல்லியமான இணைப்புக்கு உதவுகின்றனர். இவர்களின் உள்ளூர் மயமாக்கப்பட்ட அணுகுமுறை ஒரு துணைக் கருவியாகப் பயன்படுகின்றன.

xi. எனவே, இந்தத் துறையின் முழுத்திறனை அடைய, இந்திய வானிலை ஆய்வுத் துறை தனது பிரத்யேக ராடார் தரவுகளைத் தனியார் ஆய்வாளர்களுக்கும், விவசாயிகளுக்கும் எளிதில் கிடைக்கச் செய்ய வேண்டும். அத்துடன், சென்னை மண்டல வானிலை மையத்தை தமிழ்நாட்டிற்கு என்ற 'சிறப்பு வானிலை மையம்' என்ற நிலைக்கு உயர்த்தி, அதிக நிதி மற்றும் நிர்வாக அதிகாரங்களை வழங்க வேண்டும். இது, தமிழ்நாட்டிற்கான தனி வானிலை மாதிரி ஒன்றை உருவாக்க உதவும்.

xii. இந்திய வானிலை ஆய்வுத் துறையின் அறிவியல் அடிப்படையிலான கணிப்புகளே நாட்டின் பாதுகாப்புக்கு முதுகெலும்பு என்றாலும், தமிழ்நாட்டின் தனித்துவமான வடகிழக்குப் பருவமழை மற்றும் நீண்ட கடலோரச் சவால்களை எதிர்கொள்ள, தனி சிறப்பு வானிலை மையம் அத்தியாவசியத் தேவையாகிறது. அரசு அமைப்பின் நம்பகத்தன்மையும், பெரு முதலீடும், தனியாரின் உள்ளூர் சார்ந்த ஆய்வு அணுகுமுறையும் ஒன்றிணைந்தால், அந்த மையம் தமிழ்நாட்டு மக்களுக்கு எப்போதும் சரியான நேரத்தில், சரியான எச்சரிக்கைக் கொடியைத் தூக்கிப்பிடிக்கும் கலங்கரை விளக்கமாகச் செயல்படும்.